ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1793/6 - 2013 ජනවාරි මස 16 වැනි බදාදා - 2013.01.16

*1793/6 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 16 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### ஊவா மாகாண மாகாண சபை

*2011 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க ஊவா மாகாண மாகாண சபையில் மாகாண உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகம் மற்றும் மீளாய்வு செய்வதற்கான அதிகாரம் பற்றிய நியதிச் சட்டத்தின் 2 (2) ஆம் பிரிவின் 3 (ஆ) மற்றும் 3 (ம)* III *உப பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்.*

2. 2011 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க ஊவா மாகாண மாகாண சபையின் மாகாண உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வகித்தல் மற்றும் மீளாய்வு செய்வதற்கான அதிகாரம் பற்றிய நியதிச் சட்டத்தின் 2 (2) ஆம் பிரிவின் கீழ் ஊவா மாகாண சபையின் முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டம், சமாதானம், கல்வி, உள்ளூராட்சி, கலாசார விவகாரங்கள் போக்குவரத்து, காணிகள், நீர்ப்பாசனத்துறை, பொருளாதார மேம்பாடுகள் மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அத்துடன் நிர்மானத்துறை விவகாரங்கள் பற்றிய அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ ஆகிய எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 2011 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க ஊவா மாகாண மாகாண சபை உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகம் மற்றும் மீளாய்வு செய்வதற்கான அதிகாரம் பற்றிய நியதிச் சட்டத்தின் 2(1) இ மற்றும் 2 (1) உ துணை பிரிவின் கீழ் குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்து பரிசோதிப்பதற்காக ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதி அரசரான திரு. கொட்டுவில கங்கானம்லாகே சுனில் காமினி பிரான்சிஸ் பெரேரா தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

3. ஊவா மாகாணத்தின் முதலமைச்சர் மற்றும் நிதி திட்டமிடல் சட்டம் சமாதானம், கல்வி உள்ளூராட்சி கலாசார விவகாரங்கள், காணி போக்குவரத்து, நீர்ப்பாசனத்துறை, பொருளாதார மேம்பாடுகள் மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அத்துடன் நிர்மாணத்துறை பற்றிய அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ ஆகிய எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் பதுளை மாவட்டத்தின் வெலிமடை பிரதேச சபை நடவடிக்கைகளை உடன் அமுலுக்கு வரும் வகையில் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

4. 2011 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க ஊவா மாகாண மாகாண சபையின் மாகாண உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகம் மற்றும் மீளாய்வு பற்றிய அதிகார நியதிச் சட்டத்தின் 3(அ) III துணை பிரிவின் கீழ் வெலிமடை பிரதேச சபை நடவடிக்கைகளை இடை நிறுத்தப்பட்டுள்ளதுடன், அதன் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் ஊவா மாகாணத்தின் மாகாண உள்ளூராட்சி நிறுவன ஆணையாளரான திரு. மலேபத்திரன நிஷாந்த மொஹான் விக்கிரமசிங்கவிற்கு கட்டளையிடப்படுகின்றது.

சஷீந்திர ராஜபக்ஷ,
முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டம், சமாதானம்,
கல்வி, உள்ளூராட்சி, கலாசார விவகாரங்கள்,
போக்குவரத்து, காணிகள், நீர்ப்பாசனத்துறை, பொருளாதார
மேம்பாடுகள் மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அத்துடன்
நிர்மாணத்துறை விவகாரங்கள் பற்றிய அமைச்சர்.

*02-01*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.